**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
முன்னிலை : **திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி**
திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனித் திங்கள் 04–ம் நாள்
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 18–ம் நாள் புதன்கிழமை
*******

**அசல் வழக்கு எண். 82/2025**
**CNR.No.TNMY-07000097-2025**

திருஞான அமுதன் ...வாதி

**....எதிர்...**

1. வட்டாட்சியர், சீர்காழி
2. மாவட்ட ஆட்சியர், மயிலாடுதுறை ...பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 12.03.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் செல்வி. S. பிரகதி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. S. முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

கடந்த 20.09.2017ல் இறந்து போன அண்ணாமலை என்பவருக்கு வாதி வாரிசு என்ற விளம்புகை பரிகாரம் வழங்க கோரியும், மேற்படி விளம்புகை பரிகாரத்தினையொட்டி 1ம் பிரதிவாதி வாரிசு சான்று வழங்க வேண்டுமென செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும், செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வாதி வழக்குரையின் சுருக்கம்**

**(1.1)** வாதியானவர் இறந்துபோன அண்ணாமலை செட்டியார் என்பவரின்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.18 18:17:31 +0530

சகோதரர் என்றும், இறந்துபோன அண்ணாமலை செட்டியாரின் மனைவி பரிமளாவும் இறந்துவிட்டதாகவும், அண்ணாமலை செட்டியாரின் பெற்றோர்கள் திருப்பதி மற்றும் மரகதவள்ளி அண்ணாமலை இறப்பிற்கு முன்னரே இறந்துவிட்டதாகவும்,

**(1.2)** கடந்த 20.09.2017ல் இறந்துபோன அண்ணாமலைக்கு, 16.11.2024ல் இறந்துபோன பரிமளாவை தவிர வேறு யாரும் நேரடி வாரிசுகள் இல்லையென்றும், அண்ணாமலையின் பெயரில் உள்ள அசையும், அசையா சொத்துக்களையும், அவரது பெயரில் உள்ள வங்கி இருப்புகளையும் மாற்றம் செய்வதற்கு வாதி வாரிசு சான்று வேண்டி 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் மனு செய்ததாகவும்,

**(1.3)** வாதி இறந்துபோன அண்ணாமலையின் நேரடி வாரிசு இல்லை என்பதால் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தி 27.01.2025ல் மேலெழுத்து கடிதம் கொடுக்கப்பட்டதாகவும், எனவே 20.09.2017ல் இறந்துபோன அண்ணாமலை செட்டியாரின் வாரிசு, வாதி என்ற விளம்புகை பரிகாரம் கோரியும், அதையொட்டி 1ம் பிரதிவாதி வாரிசு சான்று வழங்க வேண்டுமென்ற செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 2ம் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்.**

**(2.1)** இறந்துபோன அண்ணாமலைக்கு வாதி மட்டுமே சட்டப்படியான நேரடியான வாரிசு என்பதனை நிரூபணம் செய்ய வாதி கடமைப்பட்டுள்ளதாகவும், நீதிமன்ற உத்தரவின் பேரில் 1ம் பிரதிவாதியிடம் வாரிசு சான்று பெற்றுக்கொள்ள வாதி கடமைப்பட்டுள்ளதாகவும், 1,2 பிரதிவாதிகள் அரசு அதிகாரிகள் என்பதால் அவர்களுக்கு கொடுக்கவேண்டிய 80CPC–யின் கீழான அறிவிப்பு வாதியால் கொடுக்கப்படாமல் இவ்வழக்கு அவசர நிமிர்த்தம் எதற்காக தாக்கல்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.18 18:17:37 +0530

செய்யப்படுகிறது என்ற விபரம் வாதியால் தாக்கல் செய்யப்படவில்லை என்றும்,

**(2.2)** எனவே, எவ்வித அடிப்படை காரணமும் இன்றி கறைபடிந்த கரங்களுடன் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கினை அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. இவ்வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டுள்ளன.**

1. வாதி தாவாவில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?
2. வாதி தாவாவில் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?
3. தரப்பினர்களுக்கு வேறு என்ன பரிகாரங்கள் கிடைக்ககூடியது?

**4.** வாதி தரப்பில் வாதியான திரு. திருஞானஅமுதன் என்பவர் **வா.சா.1** ஆக சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பில் **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.3** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் இல்லை.

**5.** வாதி தரப்பில் இவ்வழக்கினை அனுசரித்து வாதியான திரு. திருஞானஅமுதன் **வா.சா.1** ஆக சாட்சியம் அளித்துள்ள நிலையில், அவர் மூலமாக 20.09.2017ம் தேதியிட்ட அண்ணாமலை என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், 16.11.2024ம் தேதியிட்ட பரிமளா என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும், 27.01.2025 தேதியிட்ட 1ம் பிரதிவாதி வழங்கிய மேலெழுத்து கடிதம் அசல் **வா.சா.ஆ.3** ஆகவும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6. வாதி தரப்பு வாதம்**

**(6.1) வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்** வாதியின்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.18 18:17:42 +0530

சகோதரரான அண்ணாமலை கடந்த 20.09.2017 அன்று இறந்துவிட்டதாகவும், அவருக்கு பரிமளா என்ற மனைவி இருந்தும், அவர் கடந்த 16.11.2024ல் இறந்துவிட்டதாகவும், மேற்படி தம்பதியினருக்கு குழந்தைகள் ஏதும் இல்லை என்றும்,

**(6.2)** அண்ணாமலையின் பெற்றோரான திருப்பதி– மரகதவள்ளி ஆகியோர் அண்ணாமலை காலமாவதற்கு முன்பே காலமாகிவிட்டனர் என்றும், வாதி தான் அண்ணாமலையின் ஒரே சட்டப்படியான வாரிசு என்றும், அதனை வாதி தரப்பில் உரிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே வாதி கோரியவாறு தீர்ப்பாணை செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

7. <u>பிரதிவாதிகள் தரப்பு வாதம்</u>

**(7.1) பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்** வாதி, காலம் சென்ற அண்ணாமலை செட்டியாருக்கு நேரடி வாரிசு இல்லை என்றும், அதனால்தான் பிரதிவாதிகள் தரப்பில் வாரிசு சான்றிதழ் வழங்கப்படவில்லை என்றும், வாதி மட்டும்தான் இறந்த அண்ணாமலைக்கு வாரிசு என்பதை நிரூபிக்க தவறியதால் வாதி வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**8. வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் கேட்கப்பட்டது.**

9. இவ்வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வாதுரை, வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை பரிசீலனை செய்து இவ்வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்வு காண்கிறது.

<u>**தீர்வு**</u>

<u>10. எழுவினா –1</u>

**வாதி தாவாவில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு**



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.18 18:17:48 +0530

**கிடைக்கத்தக்கதா ?**

**(10.1)** வாதியின் சகோதரரான அண்ணாமலை செட்டியார் கடந்த 20.09.2017ல் காலமாகிவிட்டார் என்பதற்கு ஆதாரமாக அண்ணாமலையின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.1 ஆக வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவரது மனைவியான பரிமளா என்பவர் கடந்த 16.11.2024ல் காலமாகிவிட்டார் என்பதற்கு ஆதாரமாக பரிமளாவின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.2 ஆக வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(10.2)** மேற்படி அண்ணாமலை–பரிமளா தம்பதியினருக்கு மகன்கள் மற்றும் மகள்கள் ஏதும் இல்லை என்பதற்கு ஆதாரமாக 1ம் பிரதிவாதியால் வழங்கப்பட்டுள்ள மேலெழுத்து கடிதம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வா.சா.ஆ.3ல் இறந்துபோன அண்ணாமலை செட்டியார் என்பவருக்கு மனைவி திருமதி. பரிமளா தேவி என்பவர் மட்டும்தான் வாரிசுதாரர் என்றும், மகன்கள் மற்றும் மகள்கள் இல்லை என விசாரணையில் தெரிய வருகிறது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**(10.3)** ஏற்கனவே கடந்த 16.11.2024ல் பரிமளா இறந்துவிட்டார் என்று வா.சா.ஆ.2 தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் காலம் சென்ற அண்ணாமலை செட்டியாருக்கு வேறு வாரிசுகள் இல்லை என வாதி தரப்பில் தெளிவாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

**(10.4)** மேலும், காலம் சென்ற அண்ணாமலை செட்டியாருக்கு வாதி மட்டும்தான் சகோதரர் என்றும், அவர்களது பெற்றோர் திருப்பதி–மரகதவள்ளி ஆகியோர் அண்ணாமலைக்கு முன்பே காலமாகிவிட்டனர் என்றும், வா.சா.ஆ.1 சாட்சியமளித்துள்ளார். அதை மறுத்துரைக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித குறுக்கு விசாரணையும் செய்யப்படவில்லை.

**(10.5)** மேலும், பிரதிவாதிகள் தரப்பில் காலம் சென்ற அண்ணாமலைக்கு வாதி நேரடி வாரிசு இல்லாத காரணத்தினால்தான் வாரிசு சான்றிதழ்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.18 18:17:53 +0530

வழங்கப்படவில்லை என்றும், மற்றபடி நீதிமன்ற உத்தரவிடும் பட்சத்தில் வாரிசு சான்று வழங்க தயாராக இருப்பதாகவும் கட்சி எடுக்கப்பட்டுள்ளது. வாதியின் வழக்கின் போக்கை மாற்றக்கூடிய வகையிலோ, அல்லது இறந்துபோன அண்ணாமலைக்கு வேறு வாரிசுகள் உள்ளனர் என்ற அடிப்படையிலேயோ, பிரதிவாதிகள் தரப்பில் வாதியை குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**(10.6)** மேற்கண்ட சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, வாதிதான் கடந்த 20.09.2017ல் காலமான அண்ணாமலைக்கு இரண்டாம் நிலை வாரிசுதாரர் என **இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 8**ன் கீழ் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் வாதி கோரும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என எழுவினா–1 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

**<u>11.எழுவினா–2</u>**

**வாதி தாவாவில் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?**

வாதி தான் கடந்த 20.09.2017ல் காலமான அண்ணாமலை என்பவரின் வாரிசு என விளம்புகை செய்து எழுவினா–1 ஆனது வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், அவ்விளம்பல் பரிகாரத்தினையொட்டி இறந்து போன அண்ணாமலை என்பவரின் வாரிசு சான்றை வாதிக்கு 1ம் பிரதிவாதி வழங்க வேண்டும் என வாதி வழக்கில் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என எழுவினா–2 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

**<u>12. எழுவினா–3</u>**

**தரப்பினர்களுக்கு வேறு என்ன பரிகாரங்கள் கிடைக்கக்கூடியது ?**

எழுவினா–1 மற்றும் எழுவினா–2 வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் எதுவும் இல்லை என எழுவினா –3 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.18 18:17:58 +0530

**முடிவில்,** இவ்வழக்கானது அனுமதிக்கப்பட்டு, வாதி தான் கடந்த 20.09.2017ல் இறந்து போன அண்ணாமலை என்பவரின் வாரிசு என விளம்புகை செய்தும், அவ்விளம்பல் பரிகாரத்தினையொட்டி இறந்து போன அண்ணாமலை என்பவரின் வாரிசு சான்றை வாதிக்கு, 1ம் பிரதிவாதி இன்றிலிருந்து இரண்டு மாதத்திற்குள் (18.05.2026) வழங்க வேண்டும் என செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிக்கு ஆதரவாக வழங்கியும், செலவுத்தொகையின்றி தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுத்து, பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்னர் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 18–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.18 18:18:04 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>பின் இணைப்பு</u>**
**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 திரு. திருஞானஅமுதன் (வாதி)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | ** | 20.09.2017–ம் தேதியிட்ட அண்ணாமலை என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.2 | ** | 16.11.2024 –ம் தேதியிட்ட பரிமளா என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.3 | ** | 27.01.2025 தேதியிட்ட 1ம் பிரதிவாதி வழங்கிய மேலெழுத்து கடிதம் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>** – இல்லை–

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>** – இல்லை–

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.18 18:18:10 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**மாவட்ட உரமையியல் நீதிமன்றம்,**
**சீர்காழி.**

**<u>நேரிய/வரைவு தீர்ப்புரை</u>**
அசல் வழக்கு எண்.82/2025
நாள்.18.03.2026.